# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## க. பொ. த. உயர்தர நிலையறி பரீட்சை - 2021

**அரசியல் விஞ்ஞானம் - I** | 23 | T | I |

**தரம் 13 (2021)** **நேரம் : 2 மணித்தியாலம்**

**சுட்டெண் : ......................................**

**அறிவுறுத்தல்கள் :**

- இவ்வினாத்தாள் A, B ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.
- பகுதி A பல்தேர்வு வினாக்கள் 30 இனையும் பகுதி B குறுவினாக்கள் 20 இனையும் கொண்டுள்ளது.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுத வேண்டும்.
- ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி A

**01 தொடக்கம் 10 வரையிலான வினாக்களுக்குச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. அரசியல் விஞ்ஞானம் என்பது,
    1. அரசியலின் கோட்பாட்டுப் பகுதியை மட்டும் கற்கும் பாடத்துறையாகும்.
    2. அரசு, அரசாங்கம், அதிகாரம் பற்றிய விஞ்ஞானமாக அறியப்படுகிறது.
    3. அறிவு ஞான விஞ்ஞான முறைகளுடன் நெருக்கமான தொடர்புடையதாகும்.
    4. அதிகாரத்தைக் கைப்பற்றுதல், தக்கவைத்தல் மற்றும் பரவலாக்குதல் தொடர்பான செயற்பாடாகும்.
    5. விஞ்ஞான முறைகளினூடாக மட்டுமே கற்கக் கூடிய பாடமாகும். (..............)

02. அரசியல் என்பது,
    1. அதிகாரப்பிரயோகம், மோதல் முகாமைத்துவம், கூட்டு இலக்கினை அடைதல் என்பன தொடர்பான செயல்முறையாகும்.
    2. ஜனநாயக வழிமுறைகளினூடாக மட்டும் சாத்தியமாகக்கூடிய செயற்பாடாகும்.
    3. சமூக உயர் வரப்பிரசாதங்களையுடைய மனிதர்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.
    4. தேர்தல் செயற்பாடுகளை மட்டும் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் எண்ணக்கருவாகும்.
    5. மனித அறவியல், ஒழுக்கக் கோட்பாடுகள் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். (..............)

03. அரசியலைக் கற்றல் என்பது,
    1. தற்போது இயற்கை விஞ்ஞானங்களின் நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளதெனலாம்.
    2. நெறிமுறைசார் ஆராய்ச்சிமுறைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
    3. ஒரு விஞ்ஞான ரீதியிலான பரிசீலனையாக மட்டும் நோக்கப்படுகின்றது.
    4. நெறிமுறைசார் ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான ரீதியிலான பரிசீலனை என்னும் இரு விடயங்களையும் ஆய்வு செய்வதாகக் காணப்படுகின்றது.
    5. பிரயோக அரசியல் செயல்முறையினைக் குறிக்கின்றது. (..............)

04. நடத்தை வாத அணுகுமுறை என்பது,
1. அரசியல் விஞ்ஞானத்தை ஆய்வு செய்ய மிகவும் துல்லியமான ஒரேயொரு வழிமுறையாகக் காணப்படுகின்றது.
2. அரசியல் நுட்பமுறைகளை விட அரசியல் விளைவுகளிலேயே அதிக கவனம் செலுத்துகின்றது.
3. அதிகார ஸ்தாபனங்களை ஆய்வு செய்வதில் அக்கறை காட்டுகின்றது.
4. அரசியல் செயற்பாட்டாளர்களின் அவதானிக்கத்தக்க நடத்தையை மட்டும் ஆய்வு செய்கின்றது.
5. 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தோன்றிய ஆய்வு முறையாகக் காணப்படுகின்றது.

(..............)

05. அரசு என்பது,
1. சமூகத்தில் பலவந்தத்தைப் பிரயோகிக்கும் தனியுரிமை பெற்ற அமைப்பு.
2. வரலாற்று அடிப்படையில் சமூகத்திற்கு மேம்பட்ட ஸ்தாபனமாகும்.
3. மனிதர்களின் அரசியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பௌதீக அமைப்பு.
4. மக்கள் தொகை, நிலப்பரப்பு, அதிகாரபலம் என்பவற்றில் சகல அரசுகளும் சமமானவை.
5. ஆள்புல பிரதேசத்தில் இறைமையைப் பிரயோகிக்கும் நடைமுறைசார் அமைப்பு மட்டுமாகும்.

(..............)

06. அரசாங்கம் என்பது,
1. அரசின் ஆள்புல எல்லைக்குட்பட்ட அனைவரினதும் பொதுச்சித்தத்தின் விளைவு ஆகும்.
2. பங்கீட்டு நீதியின் அடிப்படையில் மனித சமூகத்தை நிர்வகித்து ஆளும் அமைப்பு ஆகும்.
3. ஜனநாயக அல்லது எதிர் ஜனநாயக வழிமுறைகள் மூலம் காலத்திற்குக் காலம் மாற்றத்திற்கு உட்படும் அமைப்பாகும்.
4. உறுப்புரிமை வலுக்கட்டாயமாக்கப்பட்ட அதிகார ஸ்தாபனமாகும்.
5. இறைமை அதிகாரத்தின் ஏக உரித்தாளனாகும். (..............)

07. அரசியல் கட்சிகள் என்பது,
1. அனைத்தாண்மை முறைகளில் போட்டித்தன்மையுடன் செயற்படுகின்றன.
2. தேர்தல் வெற்றியின் மூலம் அரசியல் அதிகாரத்தை அமுலாக்குவதை இலக்காகக் கொண்டவையாகும்.
3. அரசியல், பொருளாதார கருத்தியலின்படி ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.
4. பாதுகாப்புச்சார் மற்றும் மேம்பாட்டு ஒழுங்கமைப்புக்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றது.
5. கிரேக்க நகர அரசுகளின் இன்றியமையாத அம்சமாகக் காணப்பட்டது. (..............)

08. அமுக்கக் குழுக்கள் என்பது,
1. அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் குழுக்கள்.
2. அரசியல் கட்சிகளுடன் போட்டி போடுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மக்கள் குழுக்கள்.
3. குறிப்பிட்ட நலன்களை அடைவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மக்கள் குழுக்கள்.
4. தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மக்கள் குழுக்கள்.
5. இதன் பன்மைத் தன்மை அரசியல் அபிவிருத்தியைக் கீழ்ப்படுத்தி விடுகின்றது. (..............)

09. கீழ்வரும் அரச மாதிரிகளுடன் சரியாகப் பொருந்தும் கூற்றினையுடைய விடையாக அமைவது,
1. கோத்திர அரசமுறையில் அரசியல் பயன்பாடுகள் பழக்கவழக்கங்கள், பண்பாடு, அனுஷ்டானம், சம்பிரதாயப்படி அமைந்திருந்தது.
2. கிரேக்க நகர அரசினுள் பெண்கள், அடிமைகள், குடியேற்றவாசிகள் போன்ற பிரஜைகள் அரசியல் உரிமையைப் பெற்றிருந்தனர்.
3. அரசாட்சி முறையில் பணிசார் அடிப்படையில் அரச அதிகாரங்கள் பகிரப்பட்டு வெவ்வேறு அதிகார ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்தன.
4. 16 ஆம் நூற்றாண்டின் பின்னர் போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற ஐரோப்பிய காலனித்துவ அரசமுறைக்கு இலங்கை நேரடியாக உட்பட்டிருந்தது.
5. பின் காலனித்துவ அரசமுறை தொடர்பாக ஹம்சா அலாவி. "இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் சமூகங்களின் அரச பின் காலனித்துவம்" என்னும் கட்டுரையின் அடிப்படையில் தனது கருத்துக்களை முன்வைத்தார். (..............)

10. அனைத்தாண்மை அரசாங்க முறை என்பது,
1. திடமான அரசியல் பொருளாதார தொலைநோக்குடைய ஆட்சிமுறை.
2. யாப்புசார் வரையறைகளுக்குட்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஆட்சியாளன் காணப்படல்.
3. பரம்பரை ரீதியாக அல்லது தம்மைத்தாமே நியமித்துக் கொண்ட ஆட்சியாளனால் அரச அதிகாரம் பிரயோகிக்கப்படல்.
4. சுயாதீனமான நீதித்துறை, ஊடகம், சிவில் சமூகம் என்பவற்றின் செயற்பாடுகள் மேம்பட்டுக் காணப்படல்.
5. ஆட்சி பற்றிய எவ்விடயத்திலும் மக்களின் அவதானிப்பு மற்றும் பங்கேற்பு அங்கீகரிக்கப்பட்டமை. (..............)

**11 தொடக்கம் 20 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள கூற்றுக்களிலிருந்து சரியான கூற்றுத் தொகுதியினைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

11. அர்த்த ஜனாதிபதி முறை என்பது,
A. பிரான்சின் முதல் நான்கு குடியரசு யாப்புகளிலும் சிறப்பாகப் பின்பற்றப்பட்ட முறை.
B. மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியினாலும், சட்ட மன்றிலிருந்து நியமிக்கப்பட்ட பிரதமராலும் நிறைவேற்று அதிகாரம் பிரயோகிக்கப்படல்.
C. நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் மற்றும் அமைச்சரவை ஜனாதிபதிக்கு நிகராகக் காணப்படுவதுடன் அது பாராளுமன்றத்தின் விருப்பம் உள்ளவரை பதவியில் இருத்தல்.
D. அரசின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர் ஆகிய இரு பதவிகளையும் ஜனாதிபதி கொண்டிருத்தல்.
E. தற்போது பிரான்ஸ், இலங்கை போன்ற நாடுகளில் நடைமுறையில் காணப்படுகிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (..............)

12. சமஷ்டி அரசாங்கம் என்பது,
A. தேசிய அல்லது மத்திய அரசாங்கம் மற்றும் பிராந்திய அரசாங்கங்கள் என்னும் இரு வேறு அரசாங்க மட்டங்கள் காணப்படும்.
B. மைய அரசாங்கம், ஓர அரசாங்கம் என்பன ஒன்றின் அதிகாரத்தை மற்றொன்று உடமையாக்கிக் கொள்ள முடியாது.
C. பிராந்திய அலகுகளின் ஒத்துழைப்போடு அரசியல் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும் முறை.
D. சுயாதீன ஆட்சிப் பரப்பைக் கொண்ட இரு மட்ட அரசாங்கங்கள் காணப்படலும் யாப்பின் உயர் தன்மைக்கு மதிப்பளித்தலும்.
E. உள்ளூராட்சி அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகாரத்தைப் பெறுதல்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (..............)

13. பெண்ணியல் வாதம் என்பது,

A. பெண்களால் அனுபவிக்கப்படும் பாரபட்சங்களுக்குத் தீர்வு தேட முற்படுகிறது.

B. சமமான தொழில், சமமான சம்பளம், சமமான உரிமை என்பவற்றைத் தாராண்மைப் பெண்ணியல் வாதம் வலியுறுத்துகின்றது.

C. தீவிர பெண்ணியல்வாதம் தந்தைவழி தலைமைத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

D. இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் தோற்றம் பெற்ற கருத்தியலாகும்.

E. சமவுடமைப் பெண்ணியல்வாதம் பெண் விடுதலைக்கான போராட்டம் சமவுடமைவாதத்திற்கான போராட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

14. குடியரசு வாதம் என்பது,

A. கிரேக்க, உரோம யுகங்கள் வரை நீண்ட வரலாற்றைக் கொண்டது.

B. அரசாட்சி / முடியாட்சி முறைக்கு நேரெதிரான அரசியல் கருத்தியலாகும்.

C. இறைமையின் உடமையாளன் ஆட்சியாளன் அல்ல மக்களேயாகும் என்பதை வலியுறுத்துகின்றது.

D. அரசின் தலைவன் மன்னனாவான். இவன் பரம்பரை மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பெறுகின்றான் எனக் குறிப்பிடுகின்றது.

E. அரசியல் ரீதியாக செயற்பாட்டுடனும் பொது நன்மைக்காகவும் அர்ப்பணிப்புடனும் பிரஜைகள் செயற்படல் வேண்டுமென வலியுறுத்துகின்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

15. முரண்பாடு தொடர்பில் செயற்படும் போது பயன்படுத்தப்படும் பல்வேறு அணுகுமுறைகளாகக் கொள்ளத் தக்கவை.

A. சமூக உறவுசார் அணுகுமுறை

B. மனிதத் தேவைகள் அணுகுமுறை

C. முரண்பாட்டு முகாமைத்துவ அணுகுமுறை

D. பிரச்சினை தீர்த்தல் அணுகுமுறை

E. முரண்பாட்டு நிலைமாற்று அணுகுமுறை

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 4. ABCE (.............)

16. 1833 - 1924 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த முன்மொழிவுகளில் சரியானவை.

A. 1833 இல் இராஜகாரியமுறை ஒழிக்கப்பட்டமையால் சுதந்திரமான தொழிற்சந்தை உருவாகியமை.

B. 1910 இல் இலங்கை மக்கள் தெரிவுசெய்த பிரதிநிதிகள் சட்டவாக்கத்தில் ஈடுபட வழிவகுத்தமை.

C. 1921 இல் வகுப்புவாத பிரதிநிதித்துவ முறை முடிவுக்குக் கொண்டு வந்தமை.

D. 1924 இல் பொறுப்பிலிருந்து அதிகாரத்தைப் பிரித்தமையால் அது இலங்கைச் சமூகத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியமை.

E. 1833 இல் மாவட்ட நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு சுதந்திரமான நீதிமன்ற முறைக்கான அடித்தளமிடப்பட்டமை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

17. இலங்கையின் குடியேற்ற யுகத்தில் இடம்பெற்ற அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களில் சாதகமான விளைவாகக் கொள்ளத்தக்கது.

A. இலங்கையில் சுதந்திரமான ஊழியச்சந்தை உருவாவதற்கான களம் ஏற்படுத்தப்பட்டமை.
B. மரபு ரீதியான நிலவுரிமை முறையினை முடிவுக்குக் கொண்டு வந்தமை.
C. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக மலையகத்தில் காணிகள் தேசிய உடமையாக்கப்பட்டமை.
D. இலங்கையில் ஒரு முதலாளித்துவ பொருளாதார முறை உருவாவதற்கான தளமிடப்பட்டமை.
E. சுதேச உயர்குழாம் (மத்தியதர) வர்க்கம் தோற்றம் பெற காலாகியமை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

18. 1947 சோல்பரி அரசியல் யாப்பு மற்றும் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு என்பவற்றுக்கிடையிலான ஒத்த தன்மையைக் காட்டும் விடைத்தொகுதி,

A. கபினற் அரசாங்கமுறையினை அடிப்படையாகக் கொண்டிருந்தமை.
B. நிலப்பரப்பு, சனத்தொகை என்பன அதன் பிரதிநிதித்துவ முறைக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்டன.
C. அரசின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர் ஆகிய இருபதவிகளும் வெவ்வேறு நபர்களால் மேற்கொள்ளப்பட்டமை.
D. நாமநிறைவேற்றாளரால் நியமிக்கப்படும் அரசியல் நிறைவேற்றுப்பகுதி சட்டமன்றுக்குப் பொறுப்புடையதாகியமை.
E. நீதிப்புனராய்வு, அடிப்படை உரிமைகள், சட்டமன்ற இறைமை என்பன இரு அரசியலமைப்புகளிலும் பேணப்பட்டமை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

19. தாராள ஜனநாயக ஆட்சிமுறையின் பிரதான இயல்புகளாகக் கொள்ளத்தக்கவை,

A. யாப்புறுவாதம் மற்றும் சட்டத்தின் ஆட்சி.
B. நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.
C. சுதந்திரமான நீதியான தேர்தல் முறை மற்றும் போட்டி கட்சி முறை.
D. ஆட்சியாளர்கள் மக்களுக்கு பொறுப்புக்கூறும் ஆட்சி முறை.
E. கட்டுப்பாடற்ற அதிகாரங்களையுடைய அரசாங்கச் செயற்பாடு.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

20. பின்வரும் நாடுகளின் அரசாங்க முறையுடன் சரியாகப் பொருந்தும் சேர்மான தொகுதிகளைக் கொண்ட விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.

A. இந்திய அரசாங்க முறையில் உள்வாரி, வெளிவாரியான எதிர்ப்புகள் உருவாகும் போது மத்திய அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த முடியும்.
B. சுவிற்சர்லாந்தில் சமஷ்டிப் பேரவையானது சான்சலர்பிரபு, சமஷ்டி நீதிபதிகள் ஆகியோரை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
C. ஐக்கிய அமெரிக்க அரசாங்க முறையில் மத்திய - மாநில அரசாங்கங்களிடையே ஏற்படும் பிணக்குகள் உயர் நீதிமன்றம் மூலம் தீர்க்கப்படுகிறது.
D. மரபுகள், பழக்கவழக்கங்கள் வழக்காறுகள் என்பன அரசியலமைப்பின் பகுதிகளாகக் காணப்படுவது பிரித்தானிய அரசாங்க மாதிரியாகும்.
E. நிர்வாக அதிகார பன்முகப்படுத்தல் உள்ளூராட்சி அரசாங்கத்தின் முக்கிய பண்பாக பிரான்சிய அரசாங்க முறையில் காணப்படுகிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

**21 தொடக்கம் 23 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள கூற்றுக்களிலிருந்து பிழையான கூற்றுத் தொகுதியினைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

21. பொதுக்கொள்கை தொடர்பான **பிழையான** சேர்மான தொகுதி,
    A. மக்களின் பொதுப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்களையும் வழிமுறைகளையும் தீர்மானிக்கின்றது.
    B. அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் நிறைவேற்றுத் துறைக்கு எவ்வித பங்களிப்பும் இல்லை.
    C. தனித்தனி நபர்களின் ஆசைகளைத் திருப்திப்படுத்துவதற்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் திட்டங்களாகும்.
    D. பொதுக் கொள்கையாக்கம் நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகளில் சிவில் சமூகங்கள் முற்றாக விலகியிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
    E. பொதுக் கொள்கையாக்கம் அரசியல் கட்சிகளின் செல்வாக்கிலிருந்து முழுமையாக விடுபட்டுக் காணப்படுகின்றது.
    1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

22. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் காணப்படும் அண்மைக்கால போக்குகள் தொடர்பான **பிழையான** சேர்மானத் தொகுதி,
    A. சர்வதேச "வெளிநாட்டுக் கொள்கை" போக்குகளில் இருந்து விலகி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.
    B. சமவுடமைக் கொள்கைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.
    C. பொருளாதார இராஜதந்திர உறவுகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.
    D. முதலாளித்துவ அரசுகளைப் புறக்கணித்துச் செயற்படுகின்றது.
    E. சர்வதேச அதிகார சமநிலை மாற்றங்களுக்குச் செவிமடுக்காதுள்ளது. (.............)
    1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

23. இலங்கை அரசியல் கட்சிமுறையின் தோற்றம் வளர்ச்சி முறை என்பவற்றுடன் **தொடர்பற்ற** சேர்மானத் தொகுதியைத் தெரிவுசெய்க.
    A. 1935 டிசெம்பர் 18 ஆம் திகதி தோற்றம் பெற்ற லங்காசமசமாஜக் கட்சியே இலங்கையின் முதலாவது வலதுசாரி அரசியல் கட்சியாகும்.
    B. 1940 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவின் ஆதரவாளர்களால் இலங்கை கொம்யூனிசக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது.
    C. 1946 இல் சிங்கள மகாசபை, தமிழ்ச்சங்கம், முஸ்லீம் முன்னணி ஆகிய இடதுசாரி அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்றுவித்தனர்.
    D. 1951 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் இலங்கை சுதந்திரக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது.
    E. 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பல தமிழ் அரசியல் குழுக்கள் தம்மை ஜனநாயக நீரோட்டத்தில் இணைத்துக் கொண்டன.
    1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (.............)

**24ம், 25ம் வினாக்களுக்குத் தரப்பட்ட கூற்றுக்களிலிருந்து வினாவிற்குப் பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்க.**

24. சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்கள்,

1. இறைமைமிக்க தேசிய அரசுகள்
2. சர்வதேச அரச நிறுவனங்கள்
3. பல்தேசியக் கம்பனிகள்
4. அரசியலில் கீர்த்தி மிக்க நபர்கள்
5. தேசிய அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் (.............)

25. 1972 இன் முதலாம் குடியரசு யாப்பின் கீழ்,

1. தேசிய அரசுப் பேரவை அரசின் மீயுயர் கருவியாக்கப்பட்டது.
2. பொதுச்சேவையாளர்களின் நியமனம், இடமாற்றம், ஒழுங்கு நடவடிக்கை, பதவிநீக்கம் என்பவற்றுக்குச் சுதந்திரமான பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பாக்கப்பட்டது.
3. இலங்கை மக்கள் முதன்முதலாக அடிப்படை உரிமையைப் பெற முடிந்தது.
4. ஒரு அரசியல் அமைப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.
5. பிரதமரால் நியமிக்கப்பட்ட சனாதிபதி அரசின் தலைவரானார். (.............)

**26 முதல் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளிலிருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச்சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| இல. | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 26 | 1972 இன் முதலாம் குடியரசு யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவை மீயுயர் சட்டமியற்றும் அதிகார சபையாக விளங்கியது. | தேசிய அரசுப் பேரவை இயற்றிய சட்டங்களை எந்த ஒரு நீதிமன்றமும் கேள்வி கேட்கவோ, மறுசீரமைக்கவோ, மறுசீராய்வு செய்யவோ முடியவில்லை. (............) |
| 27 | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட பிரதான அடிப்படை உரிமையாக வாழும் உரிமை முக்கியம் பெறுகிறது. | 1978 ஆம் யாப்பில் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உயர்நீதிமன்றம், ஒம்புட்ஸ்மன், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய மூன்று ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. (............) |

| இல. | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 28 | 1978 ஆம் ஆண்டு யாப்பின் 17 ஆம் திருத்தத்தின் கீழ் ஜனாதிபதி பொலிஸ்மா அதிபரை அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனேயே நியமித்தார். இது 18 ஆம் திருத்தத்தில் இல்லாது ஒழிக்கப்பட்டு பொலிஸ்மா அதிபரை நியமித்தல். ஜனாதிபதிக்கு நேரடி பொறுப்பாக்கப்பட்டது. | 2015 ஆம் ஆண்டு 19 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளுக்கு எதிரான ஒழுக்க விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை உயர்நீதிமன்றத்திலிருந்து ஒழிக்கப் பட்டு ஓம்புட்ஸ்மனுக்கு வழங்கப்பட்டுள்ளது. (............) |
| 29 | சோல்பரியாப்பில் பாராளுமன்றமானது எந்த ஒரு சட்டத்தை உருவாக்கவும் இல்லாது செய்யவும் அதிகாரம் கொண்டுள்ளது. | சோல்பரி பாராளுமன்றம் பிரித்தானிய முடியைப் பிரதிநித்துவப்படுத்திய மகாதேசாதிபதி, பிரதமர், செனற்சபை மற்றும் பிரதிநிதிகள் சபை என்பவற்றினைக் கொண்டிருந்தது. (............) |
| 30 | 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் ஓம்புட்ஸ்மன் மக்கள் தீர்ப்பு (ஒப்பங்கோடல்) விகித சம பிரதிநிதித்துவமுறை, அமைச்சரவையின் தலைவராக சனாதிபதி போன்ற புதிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது | 1978 ஆம் ஆண்டு யாப்பின் 19 ஆம் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் உறுப்புரை 85(2) படி பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட மசோதாக்களை ஜனாதிபதி மக்கள் தீர்ப்பிற்கு விடும் அதிகாரத்தை இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. (............) |

## பகுதி B

31. அரசியலை கற்றல் என்பதில் இரு அர்த்தங்கள் உள்ளன. அவை இரண்டினையும் குறிப்பிடுக.

    1. ..........................................................................................................................................

    2. ..........................................................................................................................................

32. அரசியல் விஞ்ஞானத்தினை ஆய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் நவீன அணுகுமுறைகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.

    1. ..........................................................................................................................................

    2. ..........................................................................................................................................

33. மெய்யியல் ஆய்வில் ஈடுபட்ட அரசியல் சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

    1. ..........................................................................................................................................

    2. ..........................................................................................................................................

34. அரசியல் கட்சிமுறைகள் ஐந்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் தனிக்கட்சிமுறை, இரு கட்சி முறை என்பவற்றைப் பின்பற்றும் தலா ஒவ்வொரு நாடுகளையும் முறையே குறிப்பிடுக.

    1. ..........................................................................................................................................

    2. ..........................................................................................................................................

35. நவீன ஆள்புல அரசு பிரதான அங்கங்கள் நான்கினை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. இவற்றுள் அரசியல் ரீதியான அங்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

1. ........................................................................................................................................

2. ........................................................................................................................................

36. பின்வரும் நூல்கள் / கட்டுரைகளை எழுதிய ஆசிரியர்களைக் குறிப்பிடுக.

1. தேசிய அரசுகளின் முடிவு ........................................................................................

2. சமூக முரண்பாட்டின் செயற்பாடுகள் ........................................................................

37. ஒற்றையாட்சி நாடுகளின் மத்தியிலிருந்து கீழ் மட்டத்திற்கு அதிகாரங்களை பரவலாக்குவதற்கு மூன்று வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றுள் இருமுறைகளைக் குறிப்பிடுக.

1. ........................................................................................................................................

2. ........................................................................................................................................

38. இந்திய அரசியலமைப்பின் பிரகாரம் அவசரகால நிலை மூன்று வகையாகக் குறிப்பிடப்படுகின்றது. அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.

1. ........................................................................................................................................

2. ........................................................................................................................................

39. தாராண்மைவாத அரசியல் சிந்தனையாளராகிய ஜீன்ஜெக்ரூசோ இரண்டு எண்ணக்கருக்களை மையப் படுத்தித் தனது கருத்துக்களை முன்வைத்தார். அவ்விரு தாராண்மைவாத எண்ணக்கருக்களும் எவை?

1. ........................................................................................................................................

2. ........................................................................................................................................

40. இந்திய மத சார்பின்மைவாதமானது பிரதானமாக இரு பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவ்விரு பண்புகளையும் குறிப்பிடுக.

1. ........................................................................................................................................

2. ........................................................................................................................................

41. இலங்கையில் (1) நாடு முழுவதும் ஒரே வகையான சிவில், குற்றவியல் சட்டமுறைக்குள் கொண்டுவந்தமை.

(2) இனவாரி பிரதிநித்துவ முறைக்குப் பதிலாக பிரதேச (மாகாண) பிரதிநித்துவமுறை ஏற்படுத்தப்பட்டமை.

இவ்விரு செயற்பாடுகளையும் அறிமுகம் செய்த அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

1. ........................................................................................................................................

2. ........................................................................................................................................

42.(1) சோல்பரி யாப்பின் கீழ் அரசின் தலைவரின் உத்தியோகப் பெயரினைக் குறிப்பிடுக.

........................................................................................................................................

(2) சோல்பரி யாப்பின் கீழ் அரசின் தலைவரைப் பதவி நீக்க மேற்கொண்ட வழிமுறையைக் குறிப்பிடுக.

........................................................................................................................................

43. 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு, 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு என்பவற்றில் நீதி முன்புனராய்வு அதிகாரத்திற்குப் பொறுப்பாக விளங்கிய நீதிமன்ற ஸ்தாபனங்களைக் குறிப்பிடுக.

1. ..........

2. ..........

44.(1) 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்பட்ட போது பதவியிலிருந்த அரசாங்கக் கட்சியையும், இலங்கையின் உத்தியோக பூர்வமான பெயரினையும் குறிப்பிடுக.

..........

(2) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்பட்ட போது பதவியிலிருந்த அரசாங்கக் கட்சியையும், இலங்கையின் உத்தியோக பூர்வமான பெயரினையும் குறிப்பிடுக.

..........

45.(1) இலங்கை ஒரு குடியரசாக்கப்பட்ட பொழுது ஆட்சியில் அமர்ந்திருந்த அரசியல் கட்சி யாது?

..........

(2) இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கையினை அறிமுகம் செய்து வைத்த அரசியல் கட்சியைக் குறிப்பிடுக.

..........

46. பின்வரும் ஒவ்வொரு அரசியல் எண்ணக்கருக்களையும் முன்வைத்த அரசியல் அறிஞர்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

(1) அதிகார வேறாக்கம் ..........

(2) சட்டத்தின் ஆட்சி ..........

47. சர்வதேச அரசியல் செயற்பாடுகளில் பங்காற்றுகின்ற பிராந்திய அரசசார்பு அமைப்பு ஒன்றினையும், பாதுகாப்பு அதிகார நிறுவனம் ஒன்றினையும் குறிப்பிடுக.

1. ..........

2. ..........

48.(1) அரச கொள்கையாக்கம் தொடர்பாக எழுகின்ற சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்தலுடன் தொடர்புடைய அரச அதிகார ஸ்தாபனம் எது?

..........

(2) பணிக்குழுமுறை தொடர்பான பழமையான கோட்பாட்டினை முன்வைத்த சமூகவியல் சிந்தனையாளரின் பெயரைக் குறிப்பிடுக.

..........

49. (1) பிரான்சின் ஐந்தாம் குடியரசு அரசியல் யாப்பின் ஸ்தாபகரின் பெயரினைக் குறிப்பிடுக.

..........

(2) சுவிற்சர்லாந்து சமஸ்டி மூன்று ஸ்தாபனங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. அவற்றில் ஒரு ஸ்தாபனத்தைக் குறிப்பிடுக.

..........

50. இலங்கை (1) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்

(2) பொதுநலவாய அமைப்பு

ஆகிய இரு அமைப்புகளிலும் உறுப்புரிமையினைப் பெற்றுக் கொண்ட ஆண்டுகளைக் குறிப்பிடுக.

1. ..........

2. ..........